# கல்வி பற்றிய மார்க்ஸிய நோக்கு – ஒரு மெய்யியல் பகுப்பாய்வு

**ஐ. எல்எம். மாஹிர்**
*சிரேட் விரிவுரையாளர் (மெய்யியல்), சமூக விஞ்ஞானங்கள் துறை,*
*கலை கலாசாரப்பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்**

முதலாளித்துவச் சமூகத்தில் காணப்பட்ட வர்க்க வேறுபாடுகளானதுஏற்றத்தாழ்வு மிக்க கல்வியமைப்பினை உருவாக்கியிருந்தது. கல்வியானது முதலாளித்துவ உயர் வர்க்கத்தினால் கட்டுப்படுத்தப்படுவதோடு பாடசாலைகள் மேற்கட்டுமானத்தின் மையப்பகுதியை உருவாக்கும் மூலங்களாகச் செயற்பட்டன. அதாவது முதலாளித்துவம் உருவாக்கும் அதிகாரக் கருத்தியல்களை மாணவர்கள் மத்தியில் விதைக்கும் செயற்தளமாக பாடசாலைகளும், கல்வியும் செயற்பட்டன. இதன்படி பட்டாளி வர்க்கத்தினர் மீது மறைமுகமான ரீதியில் கருத்தியல் கட்டுப்பாடு பிரயோகிக்கப்பட்டது. இதனால் சுரண்டல் பற்றிய அறிவின்றியே அவற்றை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கும் கருவியாக கல்வி தொழிற்பட்டது. இதனை விமர்சித்த மார்ஸியம் சமூகத்தின் அனைத்துப் பிரிவினர்களுக்கும் சமத்துவமான அறிவார்ந்த கல்வி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியது. இந்நோக்கிலேயே மார்ஸியம் ஒருபுறம் சமூக மற்றும் அரசியல் கோட்பாடு என்பதையும் மறுபுறம் சமூக மாற்றம் மற்றும் புரட்சிக்கான அறிவியல் திட்டத்தையும் கொண்டு விருத்தி செய்யப்பட்டது. இதனடிப்படையில் இவ்வாய்வு மார்க்ஸிய நோக்கில் கல்வி முறைமை பற்றிய விரிவான விளக்கத்தினை முன்வைக்கிறது. இதற்காக மெய்யியல் பகுப்பாய்வு முறை மற்றும் விபரிப்பு முறை என்பன ஆய்வு முறைமைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது இரண்டாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட பண்புசார் ஆய்வாகவும் காணப்படுகின்றது.

**பிரதான சொற்கள்:** சமவுடமை, முதலாளித்துவம்,சடப்பொருள், வர்க்கப்போராட்டம்

**அறிமுகம்**

இருபதாம் நூற்றாண்டின் கம்யூனிசக் கருத்தியலை எடுத்தாண்ட கார்ள் மார்க்ஸ் (Karl Marx, 1818 – 1883) ஒரு மெய்யியலாளர் என்பதை விடவும் ஒரு புரட்சியாளராகவே அதிகம் அறியப்படுகின்றார். ஆரம்ப காலத்தில் மெய்யியலாளராகப் பயிற்றுவிக்கப்பட்ட மார்க்ஸ் தனது இருபது வயதிற்குப் பிற்பாடு பொருளாதாரம் மற்றும் அரசியல் தளத்தின்பால் திரும்பினார். எனினும் அவரது பிற்கால எழுத்துக்கள் ஒழுக்க மற்றும் அரசியல் மெய்யியல் கருத்தியலில் மெய்யியல் வரலாறு, சமூக விஞ்ஞானம் போன்ற சமகால மெய்யியல் விவாதங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளன.

மார்க்ஸினது அறிவுசார் பங்களிப்பினை வகைப்படுத்துவது மிகவும் கடினமானதாகும். சி. ரைட் மில்ஸ் (C.Wright Mills) இது பற்றிக் குறிப்பிடும் போது,'மார்க்ஸைப் போல் சிக்கலான சிந்தனையாளர் யாரும் இருக்க முடியாது. அவரது நூல்கள், பிரசுரங்கள், கட்டுரைகள், கடிதங்கள் என்பவற்றிலிருந்து ஒருவர் பெற்றுக்கொள்ளும் சுய அறிவு அவரது விருப்பம் சார்ந்ததாக அமையும். மார்க்ஸைப் பற்றிக் கற்கும் ஒவ்வொருவரும் சுய புரிதலுடன் அவரது கருத்துக்களை அணுக வேண்டும்' என்றார். இதனடிப்படையிலேயே மார்க்ஸியச் சிந்தனையில் நின்று மார்க்ஸிய அரசியல்,மார்க்ஸியப் பொருளாதாரம்,மார்க்ஸிய மானிடவியல், மார்க்ஸிய இலக்கிய விமர்சனம்,மார்க்ஸியக் கல்வி, மார்க்ஸிய கலாசார ஆய்வுகள், மார்க்ஸியச் சமூகவியல் போன்றவை எடுத்தாளப்படுகின்றன.இவ்வாறான மாறுபட்ட கண்ணோக்கிலேயே பல்வேறு ஆய்வாளர்களும் மார்க்ஸியச் சிந்தனைகளை நோக்குகின்றனர்.

நவீன சமூகங்களை மார்க்ஸியம் முதலாளித்துவச் சமூகம் எனச்சுட்டிக்காட்டியது. இது

உருவாக்கிய வர்க்க வேறுபாடுகளின்படி முதலாளித்துவ வர்க்கமானது உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தினை சுரண்டல் உற்பத்தி வழிமுறைகளை உருவாக்கி கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இந்நிலையில் மார்க்ஸியவாதிகள் கல்வியின் பங்களிப்புக் குறித்து உணருகின்றனர். முதலாளித்துவ அமைப்பில் கல்வியானது உயர் வர்க்கத்தினால் கட்டுப்படுத்தப்படுவதோடு பாடசாலைகள் மேற்கட்டுமானத்தின் மையப்பகுதியை உருவாக்குகின்றன. இதன்மூலம் அவை பாட்டாளி வர்க்கத்தில் கருத்தியல் கட்டுப்பாட்டைப் பேணுகின்றன. அதாவது பாடசாலைகள் கல்வி மூலமாக முதலாளித்துவக் கருத்துக்களை அனைத்து மாணவர்களுக்கும் வழங்குகின்றன. இதன்மூலம் சுரண்டல் பற்றிய அறியாமலேயே அக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கும் கருவியாக கல்வி தொழிற்படுகின்றது. இத்தகைய ரீதியில் கல்வி எவ்வாறு கருத்தியல் அதிகாரமாகச் செயற்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டிய மார்க்ஸியவாதிகள் இலட்சியக் கல்விமுறைமை பற்றிய கருத்தளிப்பைச் செய்தனர்.

**கருத்துமுதல் வாதமும் பொருள் முதல் வாதமும்**

மெய்யியல் வரலாற்றில் இருபெரும் அறிவுப்போக்குகளாக கருத்து முதல் வாதமும் பொருள் முதல் வாதமும் கருதப்படுகின்றன. உலகின் அடிப்படை உண்மை பற்றிய ஆய்வில் இவ்விரண்டு போக்குகளின்பால் நின்று வழங்கப்படும் விளக்கங்களின் அடிப்படையில் இவை புரிதலுக்குள்ளாகின்றன. தோற்றப்பாட்டு உலகை மறுக்கின்ற, புலன்களுக்கு அப்பாற்பட்ட உண்மையைத் தேடுகின்ற, கருத்துக்களை விபரிக்கின்ற போக்குகள் கருத்துமுதல் வாதம் எனவும் உலகம், சடப்பொருள், நுண்பொருள் என்பவற்றின் அடிப்படையில் அடிப்படை உண்மை பற்றி விளக்கும் போக்குகள் பொருள்முதல் வாதமாகவும் அறியப்படுகின்றன. இத்தகைய ரீதியில் ஹெகலில் இருந்து கருத்து முதல் வாதத்தினையும் கார்ள் மார்க்ஸிலிருந்து பொருள் முதல் வாத்தினையும் விபரிக்க முடியும்.

மார்ஸியம் என்பது மனிதன் மற்றும் சடப்பொருள் (Matter) பற்றிய கருத்துக்கள் என பொதுவாக அறியப்படுகின்றது. இத்தகைய ரீதியில் மார்க்ஸியமானது உலகு பற்றியும் மனித சமுதாயம் பற்றியும் தனித்துவமான பார்வையை உருவாக்குகின்றது எனலாம். மார்க்ஸுக்கு முந்திய மெய்யியலாளரான ஹெகலினது (Hegel, 1770 - 1831) கருத்துமுதல்வாதச் சிந்தனைக்கு(Idealist Conception) எதிரான போக்காக மார்க்ஸிசம் வளர்ந்தது. ஹெகலினது மெய்யியல் சிந்தனை இயக்கவியல் கருத்துமுதல் வாதம்(Dialectical Idealism) என அறியப்படுகின்றது.மார்க்ஸ், ஹெகலினது இயக்கவியல் (Hegelian Dialectics)> பிரெஞ்சுச் சமவுடமைவாதம; (French Socialism)> ஆங்கிலப் பொருளாதாரம்(English Economics) போன்ற கருத்தியல் சிந்தனைகளின்பால் கவரப்பட்டவராக இருந்தார். இதனடிப்படையில் மார்க்ஸியமானது ஒரு புறம் சமூக மற்றும் அரசியல் கோட்பாடு என்பதையும் மறுபுறம் சமூக மாற்றம் மற்றும் புரட்சிக்கான அறிவியல் திட்டத்தையும் கொண்டு விருத்தி செய்யப்பட்டது.

ஹெகலின் கருத்தியல் வாதத்தின் பிரகாரம் அனைத்து யதார்த்தங்களும் ஒற்றைத் தன்மையான, மாறாத மற்றும் முழுமையான யதார்த்தத்தின் வெளிப்பாடுகளேயாகும். இது யதார்த்தம் பற்றிய ஆன்மீகக் கருத்தாக அமைந்திருந்தது. ஹெகலைப் பொருத்தவரை நாகரீகத்தின் மனித வரலாறு என்பது விருப்பத்தின் (Will) முழுமையேயன்றி வேறில்லை என்பதாகும். ஆனால் வரலாற்றைப் பற்றிய மார்க்ஸின் கருத்து இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். இவர் கருத்து(Idea)அல்லது ஆன்மாவுக்குப் (Spirit) பதிலாக சடப்பொருளை (Matter) முக்கியத்துவப்படுத்துகின்றார். இதன்மூலம் ஆன்மீகக் கருத்தியலை முடிவுக்குக் கொண்டு வருவதே மார்க்ஸின் நோக்கமாகக் காணப்பட்டது எனலாம். இதன்பேறாக மார்க்ஸ் மனித வரலாற்றினை சடத்திலிருந்து தொடங்கினார்.

வரலாறு என்பது ஆன்மீக இருப்பின் விளைபொருளாகும் என்ற ஹெகலின் கருத்திற்கு மாற்றாக மார்க்ஸ் 'வரலாறு என்பது பொருள் இருப்பின் விளைபொருளாகும்' என்ற கருத்தினை முன்வைத்தார். மார்க்ஸினது வரலாறு பற்றிய கருத்து 'வரலாற்றுப்பொருள் முதல் வாதம்' எனப்படுகின்றது. நிலையான அல்லது

உண்மையான உலகமானது இயக்கவியல் முறைமையினூடான பரிபூரணக்கருத்தின் உற்பத்தியாகும் என ஹெகலியச் சிந்தனையும், இயக்கவியல் முறைமையினூடான சடப்பொருளின் (Matter) உற்பத்தியேயாகும் என மார்க்ஸியச் சிந்தனையும் கருத்தளித்தன. இதன் பிரகாரம் ஹெகலின் இயக்கவியல்கருத்தில் (Dialectical Idealism) கவரப்பட்ட மார்க்ஸ் தனது கருத்தியலை இயக்கவியல் பொருள்வாதமாக(Dialectical Materialism) முன்வைத்தார். இயக்கவியல் பொருள்முதல் வாதமானது உலகத்தினையே உண்மையான யதார்த்தம் என வாதிட்டது. இதற்கப்பால் கருத்து அல்லது ஆன்மா என்ற ஒன்று இல்லை. சடப்பொருளிலிருந்தே கருத்து உருவாகிறது. உடலின்ற p (Body) மனம் (Mind) இருக்க முடியாது. பௌதீக இருப்பே உண்மையாக இருப்பாக உள்ளது (Hook, 1950) என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

**வர்க்கப்போராட்டமும் சமவுடமை வாதமும்**

வர்க்கப்போராட்டம் (Class Struggle) எனும் கருத்தியல் மார்க்ஸியச் சிந்தனையில் ஒரு முக்கிய புள்ளியாகக் காணப்படுகின்றது. வர்க்க வேறுபாடுகள் குறித்து மார்க்ஸுக்கு முன்னர் தோன்றிய பலரும் எடுத்தாண்ட போதிலும் வகுப்புக்களின் இருப்பானது குறிப்பிட்ட உற்பத்தி முறைகள் அல்லது பொருளாதாரக் கட்டமைப்போடு பிணைந்தது என்பதை மார்க்ஸ் விளக்கினார். மேலும் முதலாளித்துவம் உருவாக்கிய புதிய தொழிலாளர் வர்க்கமானது சமூகத்தின் அனைத்து வர்க்க வேறுபாடுகளையும் இல்லாதொழிக்க வழிவகுக்கும் வரலாற்று ஆற்றலைக் கொண்டுள்ளது என்பதை அங்கீகரிக்க வேண்டும் என்ற மார்க்ஸ் 'இன்று இருக்கின்ற அனைத்து சமூக வரலாறும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறு'(McLellan, 1970) என்றார்.

ஒவ்வொரு சமூகமும், அது பழங்குடியினராக, நிலப்பிரபுத்துவச் சமூகமாக அல்லது முதலாளித்துவச் சமூகமாக இருப்பினும் அச்சமூகத்தின் தனிநபர்கள், அவர்களது வாழ்வாதார வழிமுறைகள், பொருளாதார வாழ்க்கை முறைகள் மற்றும் அவர்களது வாழ்வாதாரத்திற்கான பொருட்கள், சேவைகளை எவ்வாறு உற்பத்தி செய்கின்றனர் என்பவற்றைக் கொண்டதாகும். ஆனால் ஒவ்வொரு சமூகமும் அதன் உற்பத்தி முறை அல்லது பொருளாதார முறை என்பவற்றின் மூலம் ஒரு ஆளும் வர்க்கத்தினையும் அதன் கீழான துணை வர்க்கத்தையும் உருவாக்கியுள்ளது. இவ்விரு தரப்பினர்களது இயல்பானது இவர்களது உறவில் எதிர்ப்புநிலையை ஏற்படுத்தியது. இதனை மார்க்ஸ் உற்பத்தி உறவுகள் எனக்குறிப்பிட்டார். இவ்வாறு உருவாக்கப்பட்ட வர்க்கங்களின் விருப்பங்களும் நலன்களும் வேறுபட்டவையாகக் காணப்பட்டன.

நிலப்பிரபுத்துவ ஆட்சியானது பிரபுக்கள் மற்றும் நிலமற்ற விவசாயிகள் என்ற இரு தரப்பினர்களைக் கொண்ட பெருநிலங்களை மையப்படுத்திய ஆட்சி முறைமையாகும். இவ்வாட்சியைத் தொடர்ந்து எழுச்சி பெற்ற முதலாளித்துவப் பொருளாதாரம் உற்பத்தியைக் கையகப்படுத்தக்கூடிய சொத்துரிமைக் குழுக்களைக் கொண்டிருந்தது. அதாவது தொழிற்சாலைகள், இயந்திர ஆலைகள், சுரங்கங்கள் என்பன முதலாளித்துவத்தின் உடமைகளாகக் காணப்பட்டன. இக்குழு 'முதலாளித்துவ வர்க்கம்' எனப்பட்டது. இவர்களுக்காகப் பணிபுரியும் பெரும் தொழிலாளர் வர்க்கத்தின் மீதான வன்முறைகளை எடுத்துக்காட்டிய மார்க்ஸ் அவர்களே அவர்களது சுய விடுதலைக்கான முகவர்கள் எனக் கருதினார். அதாவது தொழிலாளர் வர்க்கத்தினரை தொழிற்துறைப்படைகளாக ஒழுங்கமைத்து அதன் மூலம் உருவாக்கச் சக்தியை அழித்து சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்ட ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றார்.

கார்ள் மார்க்ஸ் கற்பனாவாத சமவுடமை வாத்திற்கு(Utopian Socialism)எதிராக நவீன 'விஞ்ஞான சமவுடமை வாதத்தினை(Scientific Socialism)முன்வைத்தார். மனித இயல்பை நிர்வகிக்கும் அல்லது வடிவமைக்கும் சக்திகளையும் தூண்டல்களையும் மார்க்ஸ் துல்லியமாகப் பகுப்பாய்வு செய்தார். இவரே சமவுடமை வாதத்திற்கு ஒரு புதிய மெய்யியல் கண்ணோக்கினையும் இயக்கச் சக்தியையும் அளித்தார். இதனை 1848 இல் வெளிவந்த கம்யூனிச அறிக்கையானது 'நவீன சமவுடமை

வாதத்தின் பிறப்பு – அழுகை’(Birth-cry of Modern Socialism)என விபரித்தது.

கார்ள் மார்க்ஸினது மிக முக்கியமான படைப்பான மூலதனம்(The Capital)என்ற நூல் 1867 இல் வெளிவந்தது. இந்நூல் சர்வதேச அளவிலுள்ள மார்க்ஸிய வாதிகளின் புனித நூலாகப் போற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மார்க்ஸுக்கு முந்திய அனைத்து சமவுடமைவாதக் கோட்பாடுகளையும் அவர் தெளிவற்றதும், விஞ்ஞானமற்றதும் என்ற விமர்சனங்களை முன்வைத்து நிராகரிப்புக்குள்ளாக்கினார். ஏனெனில் வரலாற்றுப் போக்கினை விளக்கும் சில மாறாத சட்டங்களின் செயற்பாட்டினை மார்க்ஸ் புறக்கணித்தார். எதிர்கால அரசானது நேர்மையற்ற அறிவின் உற்பத்தியாக இருக்க முடியாது என்ற கருத்தை அவர் வலியுறுத்திக் கூறினார்.

### முதலாளித்துவக் கல்வி முறைமை மீதானமார்க்ஸிய விமர்சனம்

வாழ்க்கை என்பது நனவுநிலையால் (Consciousness) தீர்மானிக்கப்படுவதல்ல, மாறாக வாழ்க்கையாலேயே நனவுநிலை (Consciousness) தீர்மானிக்கப்படுகின்றது என்ற கூற்றின் மூலம் கார்ள்மார்க்ஸ் எமது சட ரீதியான செயற்பாட்டிலேயே (Material Activity)உண்மையான வாழுதல் தங்கியிருக்கிறது என்ற தெளிவினை முன்வைக்கிறார். இதன்பிரகாரம் மனிதச்சிந்தனை அல்லது நனவுநிலை என்பது மனிதச் செயற்பாட்டினாலேயே தீர்மானிக்கின்றது என்கிறார். அதாவது உற்பத்தியை அமைத்துக்கொள்ளும் விதம், அன்றாட வாழ்க்கையை ஒழுங்கமைக்கும் விதம் போன்ற செயல்நிலைகளே ஒருவரது சிந்தனையைத் தீர்மானிக்கிறது எனலாம்.

சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பிலிருந்தே அதன் நிறுவனங்கள், தத்துவங்கள்,நடைமுறைக் கருத்தியல்கள், கலாசாரம் போன்றவை தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு சமூகத்தின் பொருளாதாரத்தளமே ஏனைய அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. அதாவது அரசியல் அமைப்பு, சட்ட அமைப்பு,கல்வி அமைப்பு,குடும்ப அமைப்பு, இதழியல் போக்கு,மட்டுமன்றி சமூக வர்க்கப்பிரிவினை என அனைத்தும் அச்சமூகத்தின் பொருளாதார அடித்தளத்தின் பிரதிபலிப்பாகும். இத்தகைய பொருளாதர அடித்தளம் அல்லது உட்கட்டமைப்பானது மேல்கட்டுமானங்கள் மீதுதொடர்ச்சியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனடிப்படையில் கல்விமுறைமைகூட மேற்கட்டுமானத்தின் ஒரு பகுதியாகவும், பொருளாதார அடித்தளத்தின் உற்பத்தியாகவும் இருந்ததோடு பொருளாரத்தை மீள்உற்பத்தி செய்ய உபயோகிக்கப்பட்டது. இதன் பொருள் கல்வியும், கற்பித்தலும் அதிகார வர்க்கத்தின் கருவியாகச் செயற்படுகின்றது என்பதல்ல. மாறாக சமூகச்சூழ்நிலை மற்றும் செயற்பாடுகளின் விளைவாக உருவாக்கம் பெற்ற நிறுவனங்களுள் கல்வி முறைமையும் ஒன்றாகும் என்பதேயாகும்.

பொருளாதார அடித்தளம் மற்றும் மேற்கட்டுமானங்கள் என்பவைகளுக்கிடையிலான உறவு தொடர்பில் மார்க்ஸியவாதிகள் நீண்ட விவாதங்களையும் விமர்சனங்களையும் முன்வைத்தனர். அதாவது, பொருளாதார அடித்தளத்தினால் எவ்வாறு மேற்கட்டுமானங்கள் தீர்மானிக்கப்படுகின்றன? மேற்கட்டுமானத்தை உருவாக்கும் நிறுவனங்கள் சுதந்திரமானவையா?, அவை சுதந்திரமற்றவை எனில், சமூக நிறுவனங்கள் பற்றிப்பேசும்போது அவற்றின் சுதந்திரத்தொடர்பு பற்றி கவனம் கொள்ளலாமா? போன்ற வினாக்கள் தொடர்பில் விவாதங்களை எழுப்பினர்.

மார்க்ஸ் தனது ‘ஜேர்மனியக் கருத்தியல்’(German Ideology) எனும் நூலில், ‘ஒரு சமூகத்தில் பொருளாதிக்கத்தைக் கொண்டிருக்கும் வர்க்கமே அச்சமூகத்தின் அறிவுத்திறனிலும் ஆதிக்கமுடையதாகக் காணப்படும்’ (McLellan, 1973) எனக்குறிப்பிடுகிறார். அதாவது ஒரு சமூகத்தின் ஆளும் வர்க்கத்தினரே அனைத்து வயதுப்பிரிவினர்களுக்குமான நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிப்பவர்களாக இருக்கிறார்கள் என்பதையே மார்க்ஸ் இக்கூற்றின் மூலம் எடுத்துக்காட்டினார். இவர்களே சிந்தனையாளர்களாகவும், கருத்துக்களை உருவாக்குபவர்களாகவும் இருப்பதனால் சமூகப் பொதுப்புத்தியையும் கட்டுப்படுத்தும் சக்தியைக் கொண்டிருக்கின்றனர். பின்னர் அவர்கள் உருவாக்கிய கருத்துக்கள் இயல்பான சமூகவிதியாக மாற்றமடைந்து நிலையான தன்மையைப்பெறுகின்றது. இதுபற்றி மார்க்ஸ்

குறிப்பிடுகையில், ‘ஒவ்வொரு வர்க்கமும் தன்னையொரு ஆதிக்க வர்க்கமாக நிலைநிறுத்திக் கொண்ட பின்னர் தனது நோக்கங்களை அடைவத்காக சமூகத்தின் அனைத்துத் தரப்பினர்களுக்கும் பொதுவான சட்டமாக தனது கொள்கைகளை பிரதிநித்துவப்படுத்த நிர்ப்பந்திக்கிறது’ (McLellan, 1973). இதற்காக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்க அறிவுத்தளத்தினை உருவாக்குவதன் மூலம் கருத்தியல் நிரந்தரத் தன்மையைப் பிரேரிக்கிறது. இது சமூகப்பொதுப்புத்தியினை உருவாக்குகின்றது.

மார்க்ஸியம் இதனைக் ‘கருத்தியல் கட்டமைப்பு’ (Ideological Constructs) என்கிறது. அதாவது முதலாளித்துவத்தில் சமூக நலன் பேணும் ஆயுதங்களாக கருத்துக்களே உருவாக்கப்படுகின்றன. இதன்மூலம் மக்களது ஏற்றுக்கொள்ளலைப் பெறுவது இலகுவாக்கப்படுகின்றது. மார்க்ஸிய வாதத்தின் பிரகாரம் கருத்துக்கள் நடுநிலமையானவையல்ல, அவை நடைமுறையில் நிலவும் பொருளாதார அடித்தளத்தின் உருவாக்கமாகும். சமூகத்தின் ஆதிக்க வர்க்கத்தின் நலன்களுக்கேற்ப கருத்துக்கள் மாற்றமடைகின்றன. இதனடிப்படையிலேயே அன்டோனியா கிராம்ஸி(Antonio Gramsci)‘கருத்தியல் மேலாதிக்கம்’ என்பது ஆளும் வர்க்கத்தின் அறிவில் தாக்கம் செலுத்துகின்றது என்றார். இத்தகைய மேலாதிக்கம் கல்வி மற்றும் ஊடகங்கள் மூலமே சமூகத்திற்குக் கடத்தப்படுகின்றது அல்லது பரப்பப்படுகின்றது என மார்க்ஸிய வாதிகள் கருதினர். இதனாலேயே மார்க்ஸிய மெய்யியலாளரான லூயிஸ் அல் தூஷர; (Louis Althusser)கல்வியினை‘கருத்தியல் அரச இயந்திரம்’(Ideological State Apparatus)என அழைத்தார். அல் தூசரின் கூற்றுப்படி கல்வியானது கருத்தியல் அரச இயந்திரமாக இரண்டு வழிமுறைகளில் தொழிற்படுகின்றது. ‘முதலாவதாக – முதலாளித்துவம் என்பது நியாயமானதும், இயற்கையானதுமாகும் என்ற கருத்தியல் இடமாற்றத்தைச் செய்வதன் மூலம் சமூகத்தை முதலாளித்துவ ஒழுங்குமுறைக்குள் கொண்டு வருவதோடு ஏனைய கருத்தியல்களை அறிவுக்கு மாற்றமானவை, நியாயமற்றவை என்ற விம்பத்தை உருவாக்குகின்றது. இரண்டாவதாக – மாணவர்களது எதிர்காலப் பாத்திரங்களை செயற்திறனற்ற முறையில் ஏற்றுக்கொள்ளச் செய்கின்றது (Althusser, 1969) எனக்குறிப்பிடுகின்றார்.

மேலும் முதலாளித்துவப் பாடசாலைகளின் மற்றுமொரு பணி யாதெனில்,இணக்கமான மற்றும் கீழ்படிதலான பணியாளர்களை உருவாக்குவதாகும். பாடசாலைகளில் கற்பிக்கப்படும் விடயங்கள் மற்றும் முகாமைத்துவ நிர்வாக அமைப்புக்கள் என்பவற்றிற்கிடையில் இனங்காணப்பட்ட தொடர்பு குறித்து ‘முதலாளித்துவ அமெரிக்காவின் பாடசாலை முறைமை’ (Schooling in Capitalist America, 1976) எனும் நூலில் விபரிக்கப்பட்டுள்ளது. அதாவது முகாமைத்துவ நிர்வாகத்தினால் பரிந்துரைக்கப்படும் விடயங்கள் ‘மறைமுகப் பாடத்திட்டமாக’ (Hidden Curriculum) கற்பிக்கப்படுகின்றன. இது பாடத்திட்டத்தின் முக்கிய பாடத்திட்டமாக அன்றி பாடசாலைச்சூழல் அனுபவங்கள் மற்றும் நடைமுறைகளிலிருந்து கற்றுக்கொள்ளப்படுகின்றது. உதாரணமாக, செயலற்ற ரீதியில் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு அடிபணியும் விதம் உயர்மட்டத்தில் உள்ளோருக்கு தொழிலாளர்கள் அடிபணிவதை ஒத்ததாக வெளிப்பட்டது. ஆசிரியர்களின் அதிகாரம், உயர்மட்ட அதிகாரத்தையும், கற்றல் அடிப்படையில் மாணவர்களைத் தரப்படுத்துவது ஊழியத்தின் அடிப்படையில் தொழிலாளர்களையும் தரப்படுத்துவதையும் ஒத்துக்காணப்படுகின்றன. மாறாக இங்கு கற்பதிலோ, பணி புரிவதிலோ மகிழ்ச்சி வெளிப்படுவதில்லை என்பது எடுத்துக்காட்டப்பட்டது.

இங்கு இயல்பான அறிவு எனக்கருதப்படுவது சமூகக்கட்டமைப்பின் விளைவானதாகும். ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் பற்றிய கருத்தியல்கள், தனிமனித சுதந்திரம் பற்றிய நம்பிக்கை, மற்றும் போட்டிநிலமை என்பன ஆதிக்க வர்க்கத்தின் நிறுவனங்களினூடான உற்பத்தி முறைமையால் வரலாற்று ரீதியாக உருவாக்கப்பட்டதாகும். இவை பொதுநலன் நோக்கிய இயற்கையான கருத்துக்கள் அல்ல,

மாறாக பொதுநலன் என ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆளும் வர்க்கத்தினால் உருவாக்கபட்ட கருத்துக்களாகும். இதன்மூலம் பொருளாதாரத்திற்குப் பங்களிக்கும் மேற்கட்டுமானத்தின் ஒரு பகுதியாக முதலாளித்துவத்தில் கல்வி செயற்பட்டது.

### மார்க்ஸியத்தில் கல்வியின் நோக்கங்கள்

மார்க்ஸியமானதுகருத்துக்கள்; (Ideas)மற்றும் நடைமுறை விடயங்களைக் கல்வியில் இணைத்துக் கற்பிப்பதை வலியுறுத்துகின்றது. மார்க்ஸிய அரசில் கல்வியானது மார்க்ஸிய அணுகுமுறைகளையும், பெறுமானங்களையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வர்க்கமற்ற சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் அரசு பலப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் மார்க்ஸிய அரசில் பாட்டாளி வர்க்கமே அரசை அமைக்கும் எனப் பிரஸ்தாபித்தது.ஆனால் கல்வி குறிப்பிட்ட சிலரை மட்டுமே கொண்டதாக மட்டுப்படுத்தப்படாமல் சமூகத்தின் அனைத்துப் பிரிவினர்களுக்கும் சர்வதேச மயப்படுத்தப்பட்ட கல்வியை வழங்க வேண்டும் என்பதை மார்க்ஸியம் வலியுறுத்துகின்றது. இதன்மூலம் கல்விக்கான வாய்ப்பினை சமத்துவப்படுத்துவதே மார்க்ஸியக் கல்விக் கொள்கையின் குறிக்கோளாகும். ஏனெனில் கல்வியின் மூலமே சமூக முன்னேற்றத்தைச் சாத்தியப்படுத்த முடியும். சமூக மாற்றத்தின் மிகப்பரிய கருவியாக கல்வியே காணப்படுகின்றது. எனினும் அறிவார்ந்த கல்வியால் மட்டுமே இந்த இலக்கினை அடைய முடியாது. இதன் பிரகாரம் மார்க்ஸியமானது தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

ஒவ்வொரு கல்வியலாளர்களும் சமூக விருத்தியின் உண்மையான தன்மையினை தெளிவாக அறிந்திருத்தல் அவசியமானதாகும். இதற்காக வரலாறு மற்றும் பொருளியல் என்பன முறையான கண்ணோக்கில் கற்பிக்கப்பட வேண்டும். அதேபோல் மாணவர்கள் விஞ்ஞானத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் கற்றறிய வேண்டும் என்பதையும் மார்க்ஸியம் வலியுறுத்துகின்றது. மார்க்ஸியக் கல்வியின் 'தொழிலாளரும் வேலையும்' (Labor and Work) ஒருங்கிணைந்த பகுதிகளாகக் காணப்படுகின்றன. ஒரு தொழிலாளி சிறந்த ஆரோக்கியத்தைக் கொண்டிருக்காவிடில் சரியாகப்பணிபுரிய முடியாது. எனவே மார்க்ஸியக் கல்வியில் 'சுகாதாரக்கல்வி' அல்லது 'உடற்கல்வி' (Physical Education) பிரதானமானதாகும். மேலும் கலாசாரக்கல்வி, அழகியல் கல்வி, கம்யூனிச மற்றும் சோசலிச விழுமியங்கள்,உற்பத்தி ஆக்கத்திறன், குடியுரிமைக் கல்வியின் அவசியமும் வலியுறுத்தப்படுகின்றது. மட்டுமன்றி மார்க்ஸியமானது பெண்களின் கல்வி தொடர்பிலும் கருத்தளித்தது. இதனாலேயே கம்யூனிச அறிக்கையில் உலகில் உள்ள அனைவருக்கும் கட்டாய ஆரம்பக்கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும் எனக்குறிப்பிடப்படுகின்றது.

மேலும் மார்க்ஸியவாதியான லெனினின் கூற்றுப்படி 'கல்வி என்பது கலாசாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும். கல்வி, கலாசாரம் என்ற இரண்டும் சமூகப் பொருளாதார நிலைமைகளால் வடிவமைக்கப்படுகின்றன. ஆனால் உழைப்பு என்பது அனைத்துக் கலாசார முன்னேற்றத்திற்கும் அடிப்படையானதாகும். அதனால்தான் மார்க்ஸியக் கல்வியில் உழைப்பு மிகப்பிரதான இடத்தைப் பெறுகின்றது என்றார்.

மார்க்ஸ், கல்வியில் பிரதானமாக மூன்று விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என விரும்பினார். அதாவது, அறிவுசார் விருத்தி (Intellectual Development)> பௌதீக விருத்தி (Physical Development)> அனைத்து உற்பத்திச் செயன்முறைகள் பற்றிய கோட்பாடுகள் மற்றும் பொதுவான விஞ்ஞான முறைமைகள் போன்றவற்றுடன் தொடர்புபட்ட நுட்பக்கல்வி (Polytechnic Education) என்பவை கல்வி வழங்கலில் கவனிக்கப்பட வேண்டியவை என எடுத்தாளப்பட்டன.

### மார்க்ஸித்தில் கல்வித்திட்டமிடல்

மார்க்ஸியக் கல்வி வழங்கலில் பின்பற்றப்பட வேண்டியதும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதுமான பிரதான அம்சங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

1. சாதி, மதம், சமூக நிலை, பொருளாதார நிலை, பாலினம் என எவ்வித பாகுபாடுகளுமின்றி சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் கல்வி வழங்கப்படுவது கட்டாயமானதாகும்.

2. ஆண், பெண் என இருபாலாருக்கும் பொதுவான கல்வியே வழங்கப்பட வேண்டும். இணைந்த கற்றல்(Coeducation)மார்க்ஸியத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாகும்.
3. கல்வி பெறுவது சர்வதேச ரீதியானதும் கட்டாயமானதாகவும் காணப்படும்.
4. பாகுபடற்ற பாடசாலைகளை உருவாக்குதல் அவசியமானது. பொதுவான பாடசாலை முறைமையை நிறுவுவது மார்க்ஸியத்தில் முக்கியமான குறிக்கோளாகும்.
5. மதச்சார்பற்ற கல்வி முறைமையை மார்க்ஸியம் ஆதரிக்கின்றது.
6. மார்க்ஸிய கல்வி வழங்கலில் அரசு மட்டுமே தொழிற்படும். கல்வித்துறையில் தனியாரின் தலையீடு தடை செய்யப்பட்டதாகும்(Burke, 2000).

**மார்க்ஸியப் பாடத்திட்ட முறைமை**

மார்க்ஸியக் கல்வியின் பாடத்திட்டமானது மார்க்ஸியக் கல்வியின் நோக்கம், குறிக்கோள், மற்றும் பெறுமானங்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டதாகும். அத்தகைய ரீதியில் பின்வரும் சிறப்பம்சங்கள் மார்க்ஸியப் பாடத்திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

1. மார்க்ஸிச மெய்யியல் மற்றும் மார்க்ஸிசக் கோட்பாடுகள் என்பன கட்டாயப் பாட உள்ளடக்கமாகக் கற்பிக்கப்படும். இதன்மூலம் மாணவர்கள் முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம், சமத்துவமின்மை, ஏற்றத்தாழ்வு, தொழிலாளர்கள் மீதான சுரண்டல் போன்றவை பற்றிய அறிவினை வழங்குவதோடு விழிப்புணர்வையும் ஏற்படுத்தல் வேண்டும்.
2. இத்தகைய விடயங்களை பாடத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதன் மூலம் மாணவர்களின் திறன் விருத்தியினை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படுகின்றது.
3. மார்க்ஸிசம் உழைப்பினை மதிப்பதை வலியுறுத்துகின்றது. மேலும் பணி அனுபவத்தினை(Work-Experience)கல்வியின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கொண்டுள்ளது.
4. இதன் பாடத்திட்டத்தில் விஞ்ஞானம், கணிதம், புவியியல்,வானியல், சமூகவியல் போன்ற சமூகப் பயனுள்ள பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் சம்யூனிச இயக்க வரலாறு மற்றும் அரசியல் பொருளாதாரம் என்பனவும் உள்ளடக்கப்பட வேண்டியவை எனக் கருதப்படுகின்றது.
5. ஆரம்பக்கல்வியானது தாய்மொழியிலேயே கற்பிக்கப்பட வேண்டும். இரண்டாம்நிலைக் கல்வியின் போது பாடத்திட்டத்தில் பிறமொழிக் கற்பித்தல் உள்ளக்கலாம்.
6. ஆக்கத்திறன் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள; (Co-curricular Activities)மார்க்ஸியக் கல்விப் பாடத்திட்டத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன. இசை, ஓவியம், உடற்பயிற்சி, விளையாட்டுக்கள் என்பன இதில் அடங்குகின்றன.

**மார்க்ஸியக் கற்பித்தல் முறைமையும் ஆசிரியர் வகிபங்கும்**

மார்க்ஸியக் கல்வியில் கற்பித்தல் முறைமை எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் விளக்கப்பட்டுள்ளது. அதாவது,

1. கோட்பாட்டு விடயங்களுக்குப் பதிலாக கல்வியின் நடைமுறைச் சாத்தியமான விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து கற்பிக்கப்பட வேண்டும் என்பதை மார்க்ஸியம் வலியுறுத்துகின்றது.
2. மார்க்ஸியக் கல்வியானது 'செயற்படுத்தல்' கற்றல் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது. இதனடிப்படையில் மாணவர்கள் விவசாயத்தளங்கள் மற்றும் தொழிற்சாலைப் பயிற்சியைப் பெற்றிருப்பதை ஊக்கப்படுத்துகின்றது.
3. இயற்கைச் சூழல், சமுதாயம், சிறந்த புத்தகங்கள்,ஆசிரியர்கள் என்ற நான்கு விடயங்களும் கல்வியின் நான்கு தூண்கள் எனக் கருதப்படுகின்றது.
4. மார்க்ஸியக் கல்வியானது மாணவர்களின் தனிப்பட்ட அனுபவங்களைக் கருத்தில் கொண்டு கற்பித்தலை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது.
5. மார்க்ஸியம் தனிநபர் செயற்பாட்டிற்குப் பதிலாக குழுச் செயற்பாட்டினை

வலியுறுத்துகின்றது. இதன் மூலம் போட்டி மனப்பான்மையை (Competitive spirit) விட கூட்டுறவு மனப்பான்மை(Cooperative Spirit) விருத்தி ஏற்படுவதையே வரவேற்கிறது.

மார்க்ஸியக் கல்வி முறைமையில் ஆசிரியரின் வகிபங்கு மிக முக்கியமானதாகும். ஆசிரியர் கல்விப் பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தை அறிந்திருப்பது மட்டுமன்றி மார்க்ஸியக் கற்பித்தல் முறைமையினையும் கல்வியின் மார்க்ஸியக் குறிக்கோள்களையும் திட்டமாக அறிந்திருத்தல் அவசியமானதாகும். மேலும் ஒரு மார்க்ஸிச ஆசிரியர் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் முதலாளி மனோபாவத்திலிருந்து மாறுபாட்டவராக இருக்க வேண்டும். அவர் மார்க்ஸிய மெய்யியலைக் கருத்தில் கொண்ட கற்பித்தலை மேற்கொள்வது பொருத்தமானதாக ஏற்கப்படுகின்றது.

லெனினின் கூற்றின் பிரகாரம், ஒரு சிறந்த மார்க்ஸியத் தொழிலாளி என்பவர் ஒரு சிறந்த ஆசிரியராக இருப்பார் என்ற கருத்து இங்கு செயற்படுத்துவதாக இருத்தல் வேண்டும். அவரது சிந்தனையும் செயலும் மார்க்ஸியம் சார்ந்ததாகவே இருக்க வேண்டும். மேலும் கற்பித்தல் பாடத்திட்டத்தில் தேர்ச்சி பெற்றவராகவும் சமூகச்சூழல் மற்றும் கம்யூனிசக் கருத்தியல் என்பவற்றில் தேர்ச்சி பெற்றவராகவும் காணப்படுதல் அவசியமானதாகும்.

**முடிவுரை**

கார்ள் மார்க்ஸ் கல்வியியல் பற்றி நேரடியாக எதையும் எடுத்தாளவில்லை எனினும் அவரைப் பின்தொடர்ந்த எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், சிந்தனையாளர்கள் என்போர் மார்ஸியச் சிந்தனைகளின் செல்வாக்குக்கு உட்பட்டவர்கள் எனலாம். கார்ள் மார்க்ஸின் கருத்துக்களும் சிந்தனைகளும் அதற்கு முன்னரான உலகப் பார்வையை மாற்றியமைத்தவைகள் எனலாம். மார்க்ஸின் உலகப்பார்வை மாற்றத்தின் விளைவான இயக்கவியல் பொருள்முதல் விளக்கமானது சிந்தனை மாற்றத்தினை வேண்டி நிற்கிறது. இவ்வகையில் கல்வியும் சிந்தனை மாற்றத்தின் வெளிப்பாட்டை எடுத்தியம்புவதாகையால் கல்வி பற்றிய மார்க்ஸிய நோக்கு சிந்தனை மாற்றத்தினையே வேண்டி நிற்கிறது.

முதலாளித்துவக் கல்விமுறையில் காணப்பட்ட கருத்தியல் நிர்ப்பந்தத்தினை விமர்சித்த மார்க்ஸியச் சிந்தனையாளர்கள் கல்வி முறைமை எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் இலட்சிய முறைமை ஒன்றை உருவாக்கினர். மெய்யியல் நோக்கில் அக்கல்வி முறைமை பற்றி நோக்கும்போது ஜனநாயக வழிமுறையிலான கல்வித்திட்டமிடலைச் செய்வதில் மார்க்ஸியம் வெற்றி கண்டது எனலாம்.

**உசாத்துணைகள்**


1. Althusser, Louis, (1969), For Marx, London: Penguin.
2. Althusser, Louis, and Balibar, Etienne, (1970), Reading Capital, London: NLB.
3. Arthur, C.J., (1986), Dialectics of Labour, Oxford: Basil Blackwell.
4. Avineri, Shlomo, (1970), The Social and Political Thought of Karl Marx, Cambridge: Cambridge University Press.
5. Bottomore, Tom (ed.), (1979), Karl Marx, Oxford: Blackwell.
6. Brudney, Daniel, (1998), Marx's Attempt to Leave Philosophy. Cambridge, MA: Harvard University Press.
7. Burke, Barry (2000) 'Karl Marx and informal education', The encyclopedia of pedagogy and informal education, www.infed.org/thinkers/et-marx.htm.
8. Carver, Terrell (ed.), (1991), The Cambridge Companion to Marx, Cambridge: Cambridge University Press.
9. Carver, Terrell, (1982), Marx's Social Theory, New York: Oxford University Press.
10. Carver, Terrell, (1998), The Post-Modern Marx, Manchester: Manchester University Press.
11. Desai, Megnad, (2002), Marx's Revenge, London: Verso.

12. Elster, Jon, (1985), Making Sense of Marx, Cambridge: Cambridge University Press.
13. Geras, Norman, (1989), 'The Controversy about Marx and Justice,' in A. Callinicos (ed.), Marxist Theory, Oxford: Oxford University Press.
14. Hook, Sidney, (1950), From Hegel to Marx, New York: Humanities Press.
15. Husami, Ziyad, (1978), 'Marx on Distributive Justice', Philosophy and Public Affairs, 8: 27–64.
16. Kamenka, Eugene, (1962), The Ethical Foundations of Marxism London: Routledge and Kegan Paul.
17. Kolakowski, Leszek, (1978), Main Currents of Marxism, 3 volumes, Oxford: Oxford University Press.
18. Leopold, David, (2007), The Young Karl Marx, Cambridge: Cambridge University Press.
19. Lukes, Stephen, (1987), Marxism and Morality, Oxford: Oxford University Press.
20. Maguire, John, (1972), Marx's Paris Writings, Dublin: Gill and Macmillan.
21. McLellan, David, (1970), Marx before Marxism, London: Macmillan.
22. McLellan, David, (1973), Karl Marx: His Life and Thought, London: Macmillan.
23. McLelland, D. (1995) Karl Marx: A biography 3e, London: Macmillan.
24. Wheen, F. (1999) Karl Marx, London: Fouth Estate.
25. Wolff, Robert Paul, (1984), Understanding Marx, Princeton, NJ: Princeton University Press.
26. Wood, Allen, (1981), Karl Marx, London: Routledge.